**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.230/2018</u>** **தேதி.05.04.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 05.04.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஷர்மிளா |
| க/பெ. | : | சேஷாத்திரி |
| வயது | : | 54/2025 |
| தொழில் | : | இல்லத்தரசி |
| இனம் | : | பெண் |
| கிராமம் | : | அம்பத்தூர் |
| வட்டம் | : | சென்னை |
| மாவட்டம் | : | சென்னை |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிராமாணம் செய்விக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

என் தந்தை கேசவனுக்கு வருவாய் துறையினர் வழங்கிய 15.08.1995 அன்று அசைமண்ட் பட்டாவின் நகல் **வா.த.சா1** ஆகும்.(அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டது). என் தந்தை பெயரில் வருவாய் துறையினர் வழங்கிய 21.7.97 பட்டா பாஸ் புக் **வா.த.சா.2** ஆகும் என் தந்தை பெயரில் வருவாய் துறையினர் வழங்கிய பட்டா எண் 295 கணினி பட்டா **வா.த.சா.3** ஆகும். வழக்கு சொத்தின் சாகுபடி கணக்குகளின் நகல் முறையே **வா.த.சா.4 முதல் 6** ஆகும். இறந்துவிட்ட கேசவ நாயுடுவின் வாரிசு சான்றிதழ் **வா.த.சா.7** ஆகும். கேசவ நாயுடு செலுத்திய வரி ரசீதுகள் முறையே **வா.த.சா.8 முதல் 14** ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.